www.Padasalai.Net www.Trbtnpsc.Com

B

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி

தமிழ்

மதிப்பெண்கள் : 100

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 15×1=15

1) "வாவி" என்பதன் பொருள் ______

அ) வண்டு ஆ) தேன் இ) பொய்கை ஈ) குற்றம்

2) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3) பகுபத உறுப்புக்கள் ______ வகைப்படும்

அ) 6 ஆ) 8 இ) 10 ஈ) 12

4) தமிழகத்தின் பெர்னாட்ஷா என அழைக்கப்படுபவர்

அ) அறிஞர் அண்ணா ஆ) பாரதிதாசன் இ) திருவள்ளுவர் ஈ) கம்பர்

5) தமிழ்விடுதூது ______ இலக்கிய வகையைச் சார்ந்தது.

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

6) இராவண காவியம் பாடல்களைக் கொண்டது.

அ) 3100 ஆ) 3110 இ) 3000 ஈ) 1330

7) உறுபொருள் - இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினைத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை

இ) உம்மைத் தொகை ஈ) உரிச்சொல்

8) மரவேர் என்பது ______ புணர்ச்சி

அ) இயல்பு புணர்ச்சி ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

9) சாரதா சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ) 1929 ஆ) 1964 இ) 1930 ஈ) 1997

10) <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே - என்பதில் மல்லல் என்பதன் பொருள்

அ) அகழி ஆ) வளம் இ) பொய்கை ஈ) குற்றம்

11) அழியா வனப்பு, ஒழியா வனப்பு - அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கண குறிப்பு தருக.

அ) வேற்றுமைத் தொகை ஆ) பண்புத்தொகை

இ) வினைத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

(12, 13, 14, 15) விடை தருக.

பூவாது காய்க்கும் மரம் உள நன்றி அறிவார்
மூவாது மூத்தவர் நூல் வல்லார் ; தாவா
விதையாமை நாறுவ வித்துஉள மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

வினாக்கள்

12) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்

அ) சிறுபஞ்சமூலம் ஆ) புறநானூறு இ) தமிழ்விடுதூது ஈ) இராவண காவியம்

13) இப்பாடலின் ஆசிரியர்

அ) திருவள்ளுவர் ஆ) காரியாசான் இ) வைரமுத்து ஈ) சேக்கிழார்

Scanned with CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

14) தாவா - பொருள் கூறுக

அ) முதுமை அடையாமல் ஆ) முளைப்ப

இ) கெடாதிருத்தல் ஈ) பெரியவர்

15) அறிவார் - என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) வினையாலணையும் பெயர் ஆ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

இ) தொழிற்பெயர் ஈ) உரிச்சொல் தொடர்

பகுதி - II

பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி:-** 4×2=8

16) விடைக்கேற்ற வினா அமைக்க

அ) சிறுபஞ்சமூலத்தை இயற்றியவர் காரியாசான்

ஆ) உயிர்வகை ஆறு வகைப்படும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

17) கூவல் என்று அழைக்கப்படுவது எது?

18) கண்ணி - என்பதன் விளக்கம் யாது?

19) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

20) ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களை குறிப்பிடுக.

21) "தரும்" - என முடியும் குறட்பாவை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:-** 5×2=10

22) வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக.

23) மரபு சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.

அ) மேடு பள்ளம் ஆ) கண்ணும் கருத்தும்

24) பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) விளைவது

25) கலைச் சொற்களை தருக.

அ) Saline Soil ஆ) Volunteer

26) பொருள் தருக:- அ) கான் ஆ) புரிசை

27) பிழை நீக்கி எழுதுக.

அ) குழலியும் பாடத் தெரியும்

ஆ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்

28) செய்வினை, செயப்பாட்டு வினை - விளக்குக.

பகுதி - III

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:-** 2×3=6

29) முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

30) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

வாய்மையே சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா, நாக்கு ஒரு அதிசயத் திறவுகோல் என்பர்.

1. எது சிறந்த அறம்
2. அதிசயத் திறவுகோல் எது?
3. உண்மையான நா எது?

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:- 2×3=6

(வினா எண். 34 கட்டாயம் விடையளிக்கவும்)

32) ஆண்டாளின் கனவுக் காட்சியை எழுதுக.

33) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

34) அடிமாறாமல் எழுதுக.

"ஒன்றறிவதுவே" - எனத் தொடங்கும் பாடல் (அல்லது)

"காடெல்லாம்" - எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:- 2×3=6

35) தன்வினை-பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்துக.

36) "தான்" என்னும் இடைச் சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?

37) பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

அ) _________ பெரும் பொதுக்கூட்டம் (கடி, மா)

ஆ) _________ சிறந்தது. (சால, மழ)

இ) _________ பசி (உறு, தவ)

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 5×5=25

38) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக. (அல்லது)

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்புகளை தொகுத்து எழுதுக.

39) அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இணைய வழிச் சேவை பற்றி எழுதுக (அல்லது)

ஆ) ஏமாங்கத நாட்டின் வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.


40) அ) முழு உருவச் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது? (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

அ) Literature ஆ) Polyglot இ) Phonetics

ஈ) Linguistics உ) Philologist

41) அ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



Scanned with CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



(அல்லது)

ஆ) உங்கள் பெற்றோர் மகிழ்ச்சியடைய நீங்கள் செய்ய வேண்டிய செயல்களை வரிசைப்படுத்துக.

42) அ) தமிழ் எண்களை எழுதுக

அ) 120, ஆ) 100, இ) 320, ஈ) 1000, உ) 500 (அல்லது)

ஆ) பொன்மொழிகளை மொழிபெயர்க்க

1) A nation's culture resides in the hearts and in the soul of its people.
- Mahatma Gandhi
2) The art of people is a true mirror to their minds
- Jawaharlal Nehru
3) The biggest problem is the lack of love and charity.
- Mother Teresa
4) You have to dream before your dreams can come true.
- A.P.J. Abdul Kalam
5) Winners don't do different things, they do things differently.
- Shiv Khera

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:- 3×8=24

43) நயம் பாராட்டுக

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்

- கவிமணி (அல்லது)

தண்ணீர் கதையை கருப்பொருள் குறையாமல் சுருக்கி எழுதுக.

44) நூலகம், நூல்கள் ஆகிய குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

(அல்லது)

சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

45) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை சுருக்கி எழுதுக. (அல்லது)

உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.

****/****

Scanned with CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com